திரு. ஆர். ரங்கசாமி : 'ஆயில் ரிபைனரி' யை எங்கே வைப்பது என்பது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டதா? அதைக் கொச்சியில் வைக்க முடிவு செய்யப்பட்டுவிட்டதாகப் பேப்பரில் பார்த்தேன். அவ்வாறு முடிவு செய்யவில்லை என்றால் தமிழ் நாட்டில் வைக்க ஏது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த இடத்தில் ரிபைனரியை வைப்பது என்ற முடிவு அதிகார பூர்வமாக இன்னும் வரவில்லை. பத்திரிகையில் போட்டிருந்தால், கேள்விகளைப் பத்திரிகைகளுக்கே போடலாம்.

Price control

* 357-B *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken for holding the price line?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

சட்டமன்றத்தின் முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது ?

* 357-C *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps already taken and proposed to be taken for effectively checking speculation, hoarding and profiteering in foodgrains and essential commodities in the State during the Third Plan period?

THE HON. SRI P. KAKKAN : A statement has already been placed on the table of the House in reply to starred Question No. 357-B.

நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 357-(பி) க்கான பதிலுக்கு ஏற்கெனவே ஓர் அறிக்கை சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, மிளகாய் விலை ஒரு மணு 22 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 35 ரூபாயாக ஏறியிருக்கிறது. மிளகாய் விலையைக் கட்டுப்படுத்த ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : மிளகாய் விலை சில இடங்களில் இறங்கியிருக்கிறது, சில இடங்களில் ஏறியிருக்கிறது. எந்த இடத்தில் மிளகாய் விலை ஒரு மணு 22 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு அவர்கள் எழுதி அனுப்பினால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்கள் பதிலிலே நியாய விலைக்கடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்தில் அரிசி உற்பத்தி செய்யப்படுவதில்லை. கீழே இருந்துதான் அரிசி மேலே வரவேண்டும். அங்கு ஏற்கனவே இருந்த 75 நியாய விலைக் கடைகள் 50 ஆகக் குறைக்கப்பட்டு விட்டன. ஆகவே நியாய விலைக் கடைகளை மேலும் திறக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

---

a Printed as Appendix on pages on 414–417.